# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS. 6/2018. நாள்.24.01.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | முருகேசன் | **வயது** | 60 |
| **த/பெ. க/பெ.** | சீரங்கன் | **மதம்** | |
| **முகவரி** | கரிப்பேரி | **தொழில்** | கூலி |

**<u>வ.சா.1 ஆஜர். முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் வாதியாவேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 26.12.1990 தேதிய வாதி பெயரிலான பட்டா எண்.279 க்கான பட்டா அசல் **வ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. 26.12.1990 தேதிய கெம்பக்கவுண்டர் பெயரிலான பட்டா எண்.62 க்கான பட்டா அசல் **வ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. 20.07.2007 தேதிய 1 ம் பிரதிவாதி எழுதி கொடுத்த காலி வழிப்பாதை பத்திரத்தின் அசல் **வ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. அசல் வழக்கு எண்.97/2017 ன் பிராது சார்பு நகல் **வ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் **வ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

தாவா படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளிற்கினங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

ஓம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.